AD IC/EN/3981/24-1-23

அண்ணாமலை பல்கலைக்கழகம்
மாணவர் உதவி மற்றும் முன்னேற்ற மையம்

சுற்றறிக்கை

AU/SCH/SSP/2023 Date : -01-2023

பொருள்:- தமிழக அரசின் பரிசுத்தொகை - ஆதிதிராவிடர்,பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் (SC/ST/SCC) மாணாக்கர்கள் பட்டப்படிப்பு பட்டமேற்படிப்பு மற்றும் தொழிற் கல்வியில் 60% சதவீதம் மதிப்பெண் பெற்றவர்கள்.

பார்வை:- இயக்குநர் ஆதிதிராவிடர் நலத்துறை அவர்களின் கடித எண்: உ/1/11442/2022 நாள்:- 27.12.2022

*****

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 2022-2023 ஆம் கல்வியாண்டில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் இறுதி ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெற்று கல்லூரிப் படிப்பில் பெற்ற மதிப்பெண் சான்றிதழ் அடிப்படையாக கொண்டு (Consolodated Mark Sheet) இளநிலை பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு மற்றும் தொழிற் கல்வி படிப்புகளில் முதல் அமர்விலிலேயே 60% அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் மாணாக்கர்களில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கர்களுக்கு அரசு பரிசு தொகை வழங்குகிறது. இது தொடர்பான கூடுதல் தகவல்களை பல்கலைக்கழக இணைய தளத்தில் (annamalaiuniversity.ac.in) அரசின் கடிதம் மூலம் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனவே உடனடியாக தகுதியுள்ள SC/ST/SCC மாணாக்கர்கள் கீழ்கண்ட ஆவணங்களை "H", பிரிவில் சமர்ப்பிக்க கோரப்படுகிறது.

சமர்பிக்கவேண்டிய ஆவணங்கள்

1.சாதி சான்றிதழ்
2.வருமான சான்றிதழ்
3.வங்கிகணக்கு புத்தகம்
4.ஆதார் அட்டை
5.இளநிலை பட்டப்படிப்பு சான்றிதழ் (Consolidated Mark Sheet)
6.பட்டய படிப்பு சான்றிதழ் (Consolidated Mark Sheet)
7.மாற்று சான்றிதழ்

பதிவாளர்

பெறுதல்

1. அனைத்து புல முதல்வர்கள்
2. அனைத்து துறைத்தலைவர்கள் சுற்றறிக்கை அனைத்து மாணவ, மாணவிகளுக்கு வகுப்புகளில் தெரிவிக்க கோரப்படுகிறது
3. இயக்குனர் அண்ணாமலை எண்ணியல் தகவல் மையம் (இயக்குனர் இச் சுற்றறிக்கையினை பல்கலைக்கழக இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யவும்)
4. விடுதி ஒருங்கிணைப்பாளர்கள்
5. அனைத்து விடுதி காப்பாளர்கள்
6. சுற்றறிக்கையை அறிவிப்பு பலகை வாயிலாக மாணவ மாணவியர்களுக்கு தெரிவிக்க வலியுறுத்ததப்படுகிறது

நகல்:

1. துணைவேந்தரின் நேர்முக செயலர்
2. பதிவாளரின் நேர்முக உதவியாளர்

8/1/21

Director, SSP

4/1/23

OFFICE OF THE REGISTRAR
04 JAN 2023
ANNAMALAI UNIVERSITY
ANNAMALAINAGAR - 608 002

<u>விரைவு அஞ்சல் மூலம்</u>

ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்

அனுப்புநர்

திரு.த.ஆனந்த், இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்,
சேப்பாக்கம்,சென்னை-05.

பெறுநர்

பதிவாளர்,
பல்கலைக் கழகங்கள் / நிகர்நிலை
பல்கலைக்கழகங்கள்.

RA8

1154

ந.க.எண். உ.1/11442/2022 நாள்.27.12.2022

அய்யா / அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் – கல்வி – பரிசுத்தொகை திட்டம் – 2022-2023-ஆம் நிதி ஆண்டு – இளநிலை பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிப்புகளில் முதல் அமர்விலேயே 60 விழுக்காடு அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு பரிசுத்தொகை வழங்குதல் – ஏப்ரல் / மே 2022 ஆம் ஆண்டில் இறுதியாண்டு படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களின் விவரம் கோருதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.35, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3) துறை, நாள்.18.04.2012.
2. அரசாணை (நிலை) எண்.101, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3) துறை, நாள்.08.10.2020.
3. அரசாணை (ப) எண்.62, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந3) துறை, நாள்.28.03.2022.

.....

ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் இறுதியாண்டு தேர்வில் தேர்ச்சி பெற்று கல்லூரி படிப்பில் பெற்ற மதிப்பெண் சான்றிதழ் (Consolidated Marksheet) அடிப்படையாக கொண்டு இளநிலை பட்டபடிப்பு, பட்டமேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிப்புகளில் முதல் அமர்விலேயே 60% அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் மாணாக்கர்களில் உயர் மதிப்பெண்கள் பெற்ற முதல் 1000 மாணாக்கர்களுக்கு பரிசுத்தொகை திட்டத்தின் கீழ் பரிசுத்தொகையானது பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையில் அனுமதிக்கப்பட்டபடி கீழ்கண்ட முறையில் ஆண்டுதோறும் இத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | படிப்பு | பாடப்பிரிவு | மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1. | இளநிலை பட்டப்படிப்பு (U.G Course) | பி.ஏ / பி.எஸ்.சி / பி.காம் / பி.பி.ஏ மற்றும் இதர அனைத்து மூன்றாண்டு பட்டப்படிப்புகள் மற்றும் பாரா மெடிக்கல் படிப்புகளில் இளநிலை பட்டப்படிப்புகள். | மாநில அளவில் முதல் 500 நபர்களுக்கு தலா ரூ.3000/- வீதம். |
| 2. | பட்ட மேற்படிப்பு (P.G Course) | எம்.ஏ / எம்.எஸ்.சி / எம்.காம் / எம்.பி.ஏ / எம்.சி.ஏ / எம்.ஃபில் மற்றும் இதர பட்ட மேற்படிப்புகள். | மாநில அளவில் முதல் 300 நபர்களுக்கு தலா ரூ.5000/- வீதம். |
| 3. | தொழிற்கல்வி படிப்பு (Professional Course) | பொறியியல் / மருத்துவம் / வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம். | மாநில அளவில் முதல் 200 நபர்களுக்கு தலா ரூ.6000/- வீதம். |

2. பார்வை 2-இல் காணும் அரசாணையின் படி 2020-2021 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் பயனை நேரிடை பயன் பரிமாற்ற (Direct Benefit Transfer) முறையில் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வழங்கிட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

3. எனவே, 2022-2023-ஆம் நிதி ஆண்டில் பரிசுத்தொகை வழங்கிட ஏதுவாக நடப்பாண்டு (ஏப்ரல் / மே 2022) கல்லூரி தேர்வு முடிவுகளின் படி முதல் அமர்விலேயே 60 % அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணாக்கர்களின் விவரங்களை அனைத்து பல்கலைக் கழகங்கள் / நிகர்நிலை பல்கலைக்கழகங்களிலிருந்து மேலே குறிப்பிட்டபடி தகுதி வாய்ந்த ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களின் பட்டியலை கீழே குறிப்பிட்டுள்ள விதிமுறைகளைக் கருத்தில் கொண்டு **இளநிலை பட்டப்படிப்பு / பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பட்டம் எனத் தனித்தனியாக பட்டியலிட்டு இணைப்பில் கண்ட (XL Format) படிவத்தில்** பூர்த்தி செய்து மென்நகலினை (Soft Copy) esectionaward@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் வன்நகலினை (Hard Copy) இவ்வலுவலகத்திற்கும் அனுப்ப வேண்டும். அப்பட்டியல் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.25.01.2022. கடைசி தேதியிட்டு பின் வரப்பெறும் பட்டியல்கள் இவ்வலுலவகத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

நிபந்தனைகள்:

அ. பரிசுத்தொகை பெற தகுதி வாய்ந்த உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களின் பட்டியல் குறைந்த பட்சம் 60 % மதிப்பெண்கள் பெற்று கல்லூரி படிப்பினை நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள்ளாகவே முடித்த மாணவர்களின் பெயரை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

ஆ. இந்த ஆண்டில் பரிசுத்தொகைக்காக பரிந்துரைக்கப்பட்ட மாணாக்கர்கள் ஏப்ரல் / மே 2022-ல் இறுதி தேர்வு எழுதி கல்லூரி படிப்பில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

இ. தங்களால் அனுப்பப்படும் விவர பட்டியலில் அந்தந்த இனங்களில் மாணாக்கர்கள் கல்லூரி படிப்பில் பெற்ற மொத்த மதிப்பெண்களை சரியான விழுக்காட்டில் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும் (CGPA). கிரேடு (Grade) விவரத்தினை கொண்டு பரிசுத்தொகை வழங்கப்படமாட்டாது.

ஈ. மருத்துவ படிப்புகளைப் பொறுத்தவரை மாணவர்களின் அகப்பயிற்சி காலம் (Internship) படிப்புக்காலமாக கருதப்படாது. மேற்கண்ட படிப்புக்கு நவம்பர் / டிசம்பர் 2021 / ஜனவரி 2022 இறுதியாண்டு தேர்வு எழுதி குறிப்பிட்ட கால அளவிற்குள் படிப்பினை முடித்து தேர்ச்சி பெற்றவர்கள் இப்பரிசுத்தொகை பெற தகுதியுடையவர்கள்.

உ. எம்.ஃபில் படிப்பிற்கு நிர்ணயிக்கப்பட்ட ஓராண்டுக்குள்ளாகவே ஆய்வேட்டினை சமர்ப்பித்திருக்க வேண்டும்.

ஊ. இவ்வாறு வரப்பெற்ற பட்டியல்களிலிருந்து உயர் மதிப்பெண் பெற்ற மாணாக்கர்கள் பத்தி 1-இல் தெரிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையில் பரிசுத்தொகைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாணாக்கர்களின் வங்கி கணக்கிற்கு பரிசுத் தொகை அனுப்பி வைக்கப்படும். இப்பரிசுத் தொகை ஒரு முறை மட்டுமே வழங்கப்படுவதால் கல்வி உதவித் தொகை மற்றும் இதர கல்விச் சலுகையுடன் சேர்த்து கூடுதலாக வழங்கலாம்.

---

1. மேற்குறிப்பிட்ட விதிமுறைகளின் படி இறுதியாண்டு தேர்வில் தேர்ச்சி பெற்று கல்லூரி படிப்பில் பெற்ற மதிப்பெண் சான்றிதழ் (Consolidated Marksheet) அடிப்படையில் உயர் மதிப்பெண் (குறைந்தபட்சம் 60%க்கு மேல்) பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களின் பட்டியலை இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் தயாரித்து (பட்டபடிப்பு / பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி படிப்புகள் தனித் தனியே) குறிப்பாக பொறியியல் படிப்பு விவரப்பட்டியலுடன்

BCA,BBA,MCA,MBA ஆகிய பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு விவரங்களை சேர்த்து அனுப்பக்கூடாது. தனித்தனியாக பட்டியலிட்டு இவ்வலுலவகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. தகுதி வாய்ந்த எந்த மாணாக்கரின் பெயரையும் விடுபடாமல் பட்டியலில் சேர்த்து அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இதற்காக மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பம் எதிர் நோக்க வேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

3. மேலும், மாணவரது வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ( Bank Passbook) இணைத்து அனுப்பும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**4. மாணாக்கர்களின் விவரங்களை இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து மென்நகலினை (Soft Copy) Excel format-ல் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் மாணாக்கர்களின் வங்கி விவரம் (Account Number, IFSC Code மற்றும் MICR Code) அனைத்தும் Text Format-ல் இருக்க வேண்டுமென தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

5. தங்களிடமிருந்து பெறப்படும் கேட்புகளில் (பட்டியலில்) வேறு மாநிலம் / இன மாணாக்கர்களின் விவரங்கள் பட்டியலில் சேர்த்து அனுப்பினாலும் மற்றும் படிவத்தில் முழுமையான விவரங்கள் இல்லை என்றாலும் கேட்புகள் மொத்தமாக நிராகரித்து திருப்பப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஓம்/-த.ஆனந்த்,

ஆதிதிராவிடர் நல இயக்குநர்.

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக. 1/2

# PRIZE MONEY AWARD 2022 - 2023
## FORMAT

| SL.No | District Name | University Name | College Name with Address and Phone Number | Student Name | Gender | Father Name | Student Permanent Address | Course Details | Year of Joining (First year) | Year of Completion (Final Year) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| | | | | | | | | | | |

| Community (SC /ST /SCC) | Percentage of Marks (with min two decimals 60% and Above) | Aadhar No | Student Mobile No | Bank Name | Branch Name | Student Account No (in Text Format) | IFSC No (in Text Format) | MICR No (in Text Format) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| | | | | | | | | |

Sd/- T.Anand,
Director of Adi Dravidar welfare.

For Director of Adi Dravidar welfare.